சொல்லியழுதிட்டன்

சிறுகதை

எழுதியவர் : **சாந்தி ரமேஸ் வவுனியன்**

"சிலநேரம் செத்துப்போக வேணுமெண்டு கூட நினைக்கிறனான். ஆனால் பிள்ளையளையும் வீட்டுக்காறரையும் நினைச்சுப்போட்டு விட்டிடுவன். அடிச்சாக்கூடப் பறவாயில்ல அவனென்னை அடிச்சதைவிட வாயாலை காயப்படுத்தின காயங்கள்தான் அதிகம்". சற்று மூச்சை உள்ளிழுத்துத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஏனப்ப அவனோடை இருக்கிறியள்? பிடிக்காட்டி விட வேண்டியதுதானே?" இது நான். "அதுவும் ஏலாமலிருக்கு. என்னை வெளிநாட்டுக்கு கூப்பிட்டு விட்டவன் என்ரை குடும்பத்துக்கு காசனுப்ப விட்டவன் இப்பிடி சிலதுகள் அவனை விட்டிட்டுப்போகவோ இல்லாட்டி போடா வெண்டு தூக்கியெறியவோ முடியேல்ல". சொல்லிக் கொண்டு அழுதாள்.

"ஊரிலை நானும் அவனும் ஒரே ஊர். பக்கத்துப் பக்கத்து வீடு. அவேடை தோட்டக்காணியும் எங்கடை வீட்டுக்காணியும் பக்கத்தில பக்கத்தில... அந்த நேரம் அப்பாவுக்கும் அவேன்ரை அம்மாவுக்கும் நெடுகலும் சண்டை வாறது. அவைக்கும் எங்களுக்கும் பொதுக்கிணறு. வேறை பெரிய பிரச்சனை நெடுகலும்.... அப்பாவும் கொஞ்சம் ஊருக்கை அப்ப சண்டித்தனம்.... ஆரும் ஏதும் கதைச்சா உடனையும் கத்தியோடை போய் நிப்பார் ஆக்களின்ரை வாசலுக்கை....அதெல்லாம் அந்தக்காலம் போய் நாங்களும் 90ம் ஆண்டு இடம்பெயர்ந்து போனப்பிறகு அப்பாவும் அவன்ரை அம்மாவும் போட்ட வேலியளும் போச்சு எல்லையளும் போச்சு....யாழ்ப்பாணத்துக்கை அங்கினை இஞ்சினையெண்டு 95ம் ஆண்டு வரையும் 12 வீடு மாறினனாங்கள்.... பிறகு சூரியக்கதிரோடை தென்மராட்சி பிறகு வன்னியெண்டு கடைசியில பூந்தோட்டம் வவுனியாவுக்கை போய்ச் சேந்தம்....."

"ஊரிலை சொல்லுறவை நான் நல்ல வடிவெண்டு...." என அவள் முடிக்க முன்னம் சொன்னேன் "ஊரிலை சொல்றதென்ன நீங்க நல்ல வடிவுதான்.அவள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இப்பத்தைய அசின் திரிசாக்கள் மாதிரி அவள் நல்ல வடிவாயிருக்கிறாள். வரிசை தப்பாத அழகான பற்கள் அரிதாரம் இல்லாத முகமும் முடியும் கட்டையுமில்ல நெட்டையுமில்லை அளவான உயரம்.அவள் பற்றி நான் கற்பனையில் மிதக்க முதல் இடையறுத்தாள்.

"அவன்ரை அம்மாதான் என்னை அவனுக்கு கலியாணம் கட்ட விருப்பமெண்டு பெரியம்மா மூலம் கடிதமெழுதியிருந்தவ. அப்பாக்கும் அம்மாக்கும் வெளிநாட்டு மாப்பிளையொண்டு என்னை விரும்பி வருதெண்டவுடனும் நல்ல புழுகு. என்னிட்டை ஒண்டுமே கேக்கேல்ல. நானும் அம்மா அப்பா சகோதரங்கள் பட்ட கரைச்சலுகளைப் பாத்திட்டு ஓமெண்டு வெளிநாட்டுக்கு வர கொழும்புக்கு பெரியம்பாவோடை போனனான்."

கொழும்பு வந்து அவனோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு திருமணத்துக்கான ஏற்பாடுகள் சகலத்துடனும் மலேசியாவுக்கு முதல் விமானம் ஏறினாள். மலேசியாவில் தொட்டது முதல் சனி அவளுக்கு. அவன் அவளோடு தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, "எத்தினைபேர் நிக்கிறியள் ? எத்தின பொடியள் நிக்கினம்" எனக் கேட்டான். 5பொடியளும் நாங்கள் 9பெட்டையளும் தான் ஆனால் பொடியள் நல்ல உதவியெங்களுக்கு.

"அப்ப ஒருதனையும் உனக்குப் பிடிக்கேல்லயோ?" "பிடிச்சிருந்தா என்ன இஞ்சையே கலியாணத்தை முடிக்கச் சொல்றியளோ? " அவன் கேட்டதை பகிடியாக நினைத்து சும்மா தானும் ஒரு வசனம் கேட்டிருந்தாள்.

பின்னர் மொஸ்கோ செக்கோசிலாவக்கியா என அலைந்து 9மாதம் போன பிறகு செக்கோவில் அவளுடன் வந்தவொருத்தி திடீரென ஒருநாள் மாடியிலிருந்து செத்துப்போனாள். நல்ல வடிவான பெட்டை. சுவிசுக்குக் கலியாணத்துக்குப் போறனெண்டு சொல்லிக் கொண்டிருந்தவள். திடீரெண்டு செத்துப்போனது மர்மமெண்டு இப்ப குலைநடுங்குது ஆனால் அப்ப வாயே திறக்காமல் அதையும் பாத்தது தான். பிறகு அங்கையிருந்த ஒரு பொடியன் ஒருநாள் குடிச்சிட்டு வந்து உளறினான்.

"உவனை நம்பாதையுங்கோ தங்கைச்சியவை.... கெதியிலை அனுப்புவனெண்டு சொல்லி அந்தப் பிள்ளையைக் கட்டாயப்படுத்தி பாலியல் உறவு வைச்சு அது கற்பிணியானவுடனை மாடியாலை உவன்தான் தள்ளி விழுத்திக் கொண்டவன். உங்களை எங்கையும் படமெடுக்க பாஸ்போட் எடுக்கவெண்டு தனிய வரச்சொல்லிக் கேட்டா ஆராவது ஒராளை சேத்துக் கூட்டிக் கொண்டு போங்கோ....என்னையெல்லோ அந்தப்பிள்ளை அண்ணையண்ணையெண்டு அடிக்கடி வரும் பாவம் அநியாயமா செத்துப்போச்சு.....உவனிப்ப கதைவிடுறான் அதுக்கு மூளைக்காச்சல் வந்து செத்து ஊருக்கும் அனுப்பேலாமல் உங்கையெங்கையோ புதைச்சனெண்டு பொய் சொல்றான்"

ஏஜென்சியைப் பற்றி வெளியில் வந்த அந்தக் கதை அவளையும் அதிர்வித்தது. தொலைபேசியில் அவனிடம் அக்கதையைச் சொல்லி அழுதாள். "எனக்கிஞ்சையிருக்கப் பயமாக்கிடக்கு கெதியில கூப்பிடுங்கோ....இல்லாட்டி ஊருக்கனுப்புங்கோ." பாதியில் செத்து விடுவேனோ என்ற பயமும் 9மாதம் கடந்த நிலையில் இனி ஊரில் போய் அம்மா அப்பா சொந்தங்களின் முகத்தில் எப்படி முளிப்பது என்ற தவிப்பிலும் தொடர்ந்து 11மாதம் முடிந்தது. ஒரு நாள் அவள் வெளிநாடு வந்து சேர்ந்தாள்.

ஊரார் உறவினர்களென திருமணம். பெருமெடுப்பில் நிகழ்ந்தேறி அவள் முதற்குழந்தையும் பெற்றுவிட்டாள்.

"நானும் வேலைக்குப் போகவெண்டு வெளிக்கிட்டு இப்ப 5 வருசமாகீட்டுது. முந்தி அப்பாவுக்கும் அவேன்ரை அம்மாவுக்கும் நடந்த பிரச்சனையளைச் சொல்லிச் சொல்லி குடிச்சிட்டு நெடுகலும் அடிக்கிறார் சீதனமில்லாமல் தான் வாழ்க்கை தந்தவராம். அவையடை தோட்டக்காணியோடை எங்களுக்கிருக்கிற வீட்டுக் காணியை எழுதித்தரட்டாம். அந்தத் தோட்டக் காணியில அல்லது வீட்டுக்காணியில இனி பயிர் பச்சை காணிறதெண்டா நூறுவருசம் போனாலும் சரிவருமோ தெரியாது. அங்கினை கிடக்கிற மிதிவெடியள் எடுத்து நாடு ஒரு நிலைக்கு வந்து இவையெல்லாம் ஊரிலை உந்தக்காணியளுக்கு உரிமை கொண்டாடுறதெண்டது இப்ப நடக்கிற விசயமோ? அம்மாவுக்கு புற்றுநோயாம் இன்னும் எத்தினை நாளைக்கோ தெரியாது அம்மான்ரை வாழ்க்கை. ஒரு சதம் இப்ப நான் வீட்டுக்கெண்டு அனுப்பேலாது. அம்மா எங்களோடை எவ்வளவு கஸ்ரப்பட்டவ அவேடை அம்மா மாதிரித்தான என்ரையம்மாவும்" விம்மி விம்மியழுதாள்.

"இதுகளைத் தாங்கேலாம அழுதிருக்கிறன். ஆனா இப்ப இவர் செய்யிற வேலை எவ்வளவு அசிங்கம் பிடிச்சது. நீங்களே சொல்லுங்கோ பாப்பம்? இப்ப நான் வேலைக்குப் போட்டு இல்லாட்டி எங்கையாவது வெளியில போட்டு வந்தா இழுத்துக் கொண்டு போய் பாத்றூமுக்கை வைச்சு உள்ளுடுப்பை உரிஞ்சு பாக்கிறார்....இதுக்கென்ன அர்த்தம்? நானொருக்கா மலேசியாவில நிக்கேக்க அங்கை யாரையேன் பிடிச்சா கலியாணத்தை முடிக்கட்டோவெண்டு கேட்டனானாம். அதையெல்லாம் இப்ப சொல்லிக் குத்திக் காட்டிறார். அவர் சொன்ன கதைக்கு நானும் அப்ப பகிடியா ஏதோ சொல்லீட்டன். அது பிழையோ? வெளிநாடு வரேக்க தெரிஞ்ச சில படிச்ச பொடியளுக்கு இவற்றை நம்பரைக் குடுத்திருந்தனான். அவங்கள் ஆரேன் எப்பவும் இருந்திட்டு என்னோடை ரெலிபோனெடுத்துக் கதைச்சா நான் துலைஞ்சன். அதுகளுக்கு இந்த அசிங்கம் புடிச்ச கதையளைச் சொல்ல ஏலுமோ? கலியாணங் கட்டினா தெரிஞ்ச படிச்ச ஆம்பிளையள் ஒருதரும் கதைக்கக் கூடாதோ?" கேட்டாள்.

அவள் கேள்விகளுக்கு என்னிடம் இருந்த ஒரே பதில் அவனை விட்டுவிடு தனியே உனது வாழ்வை அமைத்துக் கொள் என்பதாகவே இருந்தது. அவளோ "அவனென்னை கூப்பிட்டு விட்ட நன்றியை மறக்கிறதோ" என்கிறாள்.

திவ்யா மனிசனை விட்டுப் பிரிஞ்சிட்டாளாம். சபீனா தோள்களில் தட்டிச் சொன்னாள் இவள் குறுக்கிட்டு. "ஆரந்த திவ்யா?" கேட்டாள். திவ்யாவைப் பற்றி சொல்லத் தொடங்கினால் அது முடியாத கதையென்று கதையை நிறுத்துகிறேன். நேரம் மதியம் 12 எதிரிலிருந்த சேர்ச் மணியடிக்கிறது. அனைவரும் வீடுகளுக்குச் செல்லத் தயாராகுகிறோம். அவளிடமிருந்து விடைபெறுகிறேன். அடுத்த வாரம் விட்டு அடுத்தவாரம் மீளவும் சந்திப்போமென்ற நம்பிக்கையோடு போகிறோம்.

கிட்டத்தட்ட 3 வருடங்கள் மாதம் இருமுறை நிகழும் இந்தப் பெண்கள் சந்திப்பில் வந்து போன ஆபிரிக்க அமெரிக்க ஐரோப்பிய ஆசியப் பெண்கள் எத்தனையோ பேரின் சோகங்கள் தாங்கிய இந்த அறை என்றும் போல இன்றும் அமைதியாக இருக்கிறது. எத்தனையோ பெண்களுக்கான புது வாழ்வு கொடுத்த இடமாகவும் இந்த இடம் இருந்திருக்கிறது.

இந்தச் சந்திப்பை தவறாமல் நடத்திவரும் 'பெண்களும் தொழிற்கல்வியும் நிறுவனம்' தனது தோள்களில் எத்தனையோ பெண்களின் துயரையும் வாழ்வையும் சுமந்து மறுவாழ்வு கொடுத்தும் ஆசியப் பெண்கள் இந்த இடத்தை எட்டிப் பார்ப்பதேயில்லை. ஏனெனில் அவர்கள் கணவர்களுக்கு அச்சத்தை தரும் யேர்மனியப் பெண்களும், ஒரு ஈழத்துப் பெண்ணும் இந்த நிறுவனத்தோடு இயங்குகிறார்கள்.

காலம் வரும் இன்று துயர் சொன்னவளின் வாழ்வு ஒளிபெறுதற்கு....நினைத்தபடி வெளியில் வருகிறேன். மழை தூறிக் கொண்டிருந்தது. நடைபாதையில் ஒரு தமிழ்க் கணவன் வந்து கொண்டிருக்கிறான்.

SHOP FOR SALE (OFFLICENCE / GROCERY). PENGE SE20.

Potentialy rent free. Price: £65K (negotiable), Rent: £16Kp.a (Sublet income £16K)

Sales: £6-7Kp.w, Lease: 15Years

Next Step Estates.

Maran: 020 8767 6181 / 07931463376

Mathematics and Physics Classes for GCSE, A/S and A/2 Students by an Experience Teacher

Contact Details

T.Sutharssan BscEng Msc MIET

07825751407

tsutharssan@iee.org

For Further details contact: Pratheepan 07502 370767 / 020 8900 895

Priya Restaurant.- 'For Idiyappam'

String Hoppers for Sale.

இடியப்பம் விற்பனைக்கு Ediapapam vitpanaikku /

100 இடியப்பம் £12, 500 இடியப்பம் £50.

Call **020 8471 5552, 020 8520 5552**

Web developer

We are looking for Web Developer to join a small dynamic team to spear head web developent projects. You will need demonstrable skill and experience of web development.

Essential skills:

- XHTML, CSS, Dreamweaver, Flash - Graphic design packages like Adobe photoshop

Knowledge of scripting language is highly desirable.

Please forward your CV to ***info@orupaper.com***

Application developer

The ideal candidate should have proven experince in application development in LAMP environment.

Essential skills:

- XHTML, Javascript and AJAX

MySQL , Apache, PHP

Knowledge of other progrmming environment is an added advantage.

Please forward your CV to ***info@orupaper.com***

பிரித்தானிய ஐரோப்பிய தகவல் ஏடு

தமிழ் ஓலைகள்

www.tamilpages.org

020 8543 2126 / 0771 800 3838/ 0771 800 3839



PERMA

INTERNATIONAL SHIPPING LTD

உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?

இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்

தொடர்புகளுக்கு: சிவம்

45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL

Tel: **020 8646 5222**, Mobile: **07939 550397**